தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 110 | 4 Pages | 18.11.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 110 | 4 பக்கங்கள் | 18.11.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க் கின்னா செயல்**

**விளக்கம்:**

**தன் உயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், அத் துன்பத்தை மற்ற உயிருக்குச் செய்தல் என்ன காரணத்தாலோ.**

## நைஜீரியா சென்றடைந்தார் பிரதமர் மோடி

*அபுஜா, நவ.18*

நைஜீரியா அதிபர் போலா அகமது தினுபு அழைப்பின் பேரில் பிரதமர் நரேந்திர மோடி தனி விமானம் மூலம் இன்று அதிகாலை அபுஜா சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு கூடியிருந்த இந்திய வம்சாவளியினரும் வரவேற்பு அளித்தனர்.

கடந்த 17 ஆண்டில் இந்திய பிரதமர் ஒருவர் நைஜீரியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

இந்தியா, நைஜீரியா இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, நைஜீரியாவில் உள்ள இந்திய வம்சாவளியினரிடம் அவர் உரையாற்றுகிறார்.

இதைத்தொடர்ந்து, பிரேசில் செல்லும் பிரதமர் மோடி ரியோடி ஜெனிரோ நகரில் 18ம் தேதி தொடங்கும் ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார். இந்த மாநாட்டுக்கு பிரேசில் அதிபர் லுயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தலைமை தாங்குகிறார். மாநாட்டுக்கு இடையே பிரேசில் அதிபர் உள்பட பல்வேறு உலகதலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

அதைத்தொடர்ந்து, கயானா அதிபர் முகமது இர்பான் அலியின் அழைப்பை ஏற்று பிரதமர் மோடி வரும் 19ம் தேதி அந்நாட்டுக்கு செல்கிறார். 20ம் தேதி அதிபர் இர்பான் அலியை சந்தித்து பேச உள்ளார். இதையடுத்து கயானா நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரையாற்ற உள்ளார்.

## சீனாவில் கத்திக்குத்து தாக்குதல்: 8 பேர் பரிதாப பலி

*பீஜிங், நவ.18*

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தின் வுக்ஸி நகரில் கல்வி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், அந்தக் கல்வி நிறுவனத்தில் படிக்கும் 21 வயது வாலிபர் கண்ணில் பட்டவர்கள் மீது சரமாரியாக கத்திக்குத்து தாக்குதல் நடத்தினார்.

இந்த கோர தாக்குதலில் 8 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர் என்றும், மேலும் 17 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் முதல் கட்ட தகவல் வெளியானது.

தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே கடந்த 12ம் தேதி சீனாவின் ஜுஹாய் நகரில் உள்ள விளையாட்டு மையத்தில் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்த மக்கள் மீது வேகமாக வந்த கார் மோதியதில் 35 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2 ஆண்டுகள் சிறையில் இருந்த ரேசா பாங்கி எக்ஸ் தளத்தின் தலைமை நிதி அதிகாரியாக நியமனம்



*அமெரிக்கா, நவ 18*

எலான் மஸ்க் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பிரபல சமூக ஊடகமான டுவிட்டரை 44 பில்லியன் டாலர் விலைக்கு வாங்கினார். பின்னர் எலான் மஸ்க் டுவிட்டருக்கு எக்ஸ் என்ற பெயர் மாற்றம் செய்தார். இந்நிலையில், எக்ஸ் தளத்தின் தலைமை நிதி அதிகாரியாக துபி ஸ்ட்ரீமிங் தளத்தின் முன்னாள் நிதித் தலைவரான மஹ்மூத் ரேசா பாங்கி நியமிக்கப்பட்டுள்ளார். மஹ்மூத் ரேசா பாங்கி தான் எக்ஸ் தளத்தின் தலைமை நிதி அதிகாரியாக நியமிக்கப்பட்ட முதல் நபர் ஆவார். எக்ஸ் தளத்தில் லைவ் ஸ்ட்ரீமிங்கில் அதிக கவனம் செலுத்தவே பாங்கி பணியமர்த்தப்பட்டுள்ளார் என்று சொல்லப்படுகிறது. 2010 ஆம் ஆண்டு தவறான அறிக்கைகளை வழங்கியதற்காக பாங்கி கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்தார். பின்னர் 2021ல் பாங்கியை அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மன்னித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளை மாளிகைக்கு 27 வயது பெண்ணை செய்தி தொடர்பாளராக நியமித்த டிரம்ப்



*அமெரிக்கா, நவ 18*

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டிரம்ப் ஜனவரி மாதம் 20ந்தேதி பதவியேற்கிறார். அவர் தற்போது தனது ஆட்சி நிர்வாகத்தில் இடம் பெறுபவர்களை தேர்வு செய்து வருகிறார்.

இந்த நிலையில் வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளராக கரோலின் லீவிட் என்ற 27 வயது பெண்ணை நியமனம் செய்துள்ளார். இவர் டிரம்பின் பிரசார உதவியாளராக பணியாற்றி இருந்தார்.

இதுகுறித்து டிரம்ப் கூறும்போது, கரோலின் லீவிட் மேடையில் சிறந்து விளங்குவார் என்று எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது, மேலும் அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக மாற்றுவோம் என்ற செய்தியை மக்களுக்கு வழங்க உதவுவார் என்றார். வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் பதவியை வகிக்கும் இளம் வயது நபர் கரோலின் லீவிட் ஆவார். இதற்கு முன்பு 1969ம் ஆண்டு 29 வயதான ரான் ஜீக்லர் நியமிக்கப்பட்டிருந்தார்.

# பொய்க்கு மேக்கப் போட்டால் அது உண்மையாகி விடாது 4 ஆண்டு சிறப்பாக ஆட்சி நடத்தியதாக சிரிக்காமல் பேட்டி அளிக்கிறார் எடப்பாடி: முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி

*அரியலூர், நவ.18*

‘பொய்க்கு மேக்கப் போட்டால் அது உண்மையாகி விடாது. 4 ஆண்டு சிறப்பாக ஆட்சி நடத்திய தாக சிரிக்காமல் எடப்பாடி பேட்டி அளிக்கிறார்’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்து உள்ளார். அரியலூர் கொல்லாபுரத்தில் நேற்று நடந்த அரசு விழாவில் நலத் திட்ட உதவிகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: திட்டத்தை அறிவித்தோம், நிதி ஒதுக்கினோம், அதிகாரிகள் பார்த்துக்கொள்வார்கள் என்று ஓய்வெடுக்க செல்பவன் நான் இல்லை. கடந்த காலத்தில் ஒரு சிலர் இருந்தார்கள். நாட்டில் என்ன நடக்கிறது என்றும் தெரியாது. தெரிந்தாலும், தெரியாத மாதிரியே, அப்படியா? டி.வி.யில் பார்த்துதான் தெரிந்துக்கொண்டேன் என்று பிரச்னைகளை கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். நான், பிரச்னைகளைநேர்கொண்டுநிற்கிறேன்.

அந்த பிரச்னையைத் தீர்க்கிறேன். மக்களுக்காக பார்த்து பார்த்து திட்டங்கள் தீட்டுகிறேன் திட்டங்கள் எப்படி செயல்படுகிறது என்று கள ஆய்வு செய்கிறேன் சொன்னால், சொன்ன நாட்களுக்குள் திட்டங்களை திறந்து வைக்கிறேன். அதனால்தான், இந்த ஸ்டாலின் எங்கு சென்றாலும் மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். எங்கள் குறைகளை போக்குவார் என்ற நம்பிக்கையோடு, தேடி வந்து மனுக்களை கொடுக்கிறார்கள். அந்த நம்பிக்கையை, நான் எந்நாளும் காப்பாற்றுவேன் காப்பாற்றுவேன் என்று உறுதிதருகிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் என்மேலும், திமுக மேலும் வைத்திருக்கும் நம்பிக்கையும், அளவில்லாமல் பொழியும் அன்பும், எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்களுக்கு கொஞ்சம் கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. கொஞ்சம் அல்ல. நிறைய கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எங்களது மக்கள் இன்றைக்கு எப்படியெல்லாம் வரவேற்பு தருகிறார்கள் என்பதை அவர்களும் பார்க்கிறார்கள். எங்கே, மக்கள் தன்னை மறந்துவிடுவார்களோ என்று நினைத்து நாள்தோறும் மீடியாவின் முன்பு தன்னுடைய பொய்மூட்டைகளை அவிழ்த்து விட்டுக்கொண்டு இருக்கிறார். “2011ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை 10 ஆண்டு காலம் சிறந்த ஆட்சியை அதிமுக தந்ததாகவும், ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது நிறைய திட்டங்களை கொண்டு வந்து, அவர் மறைவிற்கு பிறகு நான்கு ஆண்டு தான் சிறப்பாக ஆட்சி செய்ததாகவும், சிரிக்காமல் பேட்டி கொடுத்திருக்கிறார். பொய்க்கு மேக்கப் போட்டால் அது உண்மையாகி விடாது. இன்னும் பளிச்சென்று அம்பலப்பட்டு போகும். தொழில்முதலீட்டாளர்கள் மாநாடு என்று ஒன்றை நடத்தினார் பழனிசாமி. அது உங்களுக்கு தெரியும். ரூ.3லட்சம் கோடி முதலீட்டை, தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்து சேர்த்து விட்டேன் என்று பெருமையோடு பேசினார்.

நான் கேட்கிறேன். எதிர்க்கட்சி தலைவராக இருக்கக்கூடிய பழனிசாமி அவர்களே, நீங்கள் நடத்திய முதலீட்டாளர் மாநாடு மூலமாக எவ்வளவு முதலீடுகள் வந்தது, இதனால் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எத்தனை பேர், இதையெல்லாம் புள்ளி விவரத்துடன் உங்களால் சொல்ல முடியுமா? வந்தவர்களையும் விரட்டி விட்டார்கள். ஏன் என்றால், கரப்ஷன், கமிஷன், கலக்ஷன். அந்த ஆட்சிக்கு பயந்து, தமிழ்நாட்டை விட்டு ஓடிச்சென்றவர்கள் பல பேர். நம்முடைய திராவிட மாடல் ஆட்சி தான் திரும்ப அழைத்துக்கொண்டு வந்து தொழில் மறுமலர்ச்சியை இன்றைக்கு ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.



கடந்த மூன்று ஆண்டுகளில், 31 லட்சம் பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுகிறோம். உடனடியாக அவர்களை தொழில் தொடங்க அனைத்து வித முயற்சிகளும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். நானே பல திறப்பு விழாக்களுக்கு சென்றுவருகிறேன், கலந்து கொண்டு வருகிறேன், திறந்துவைத்துவிட்டு வருகிறேன். இதுதான் நல்லாட்சியின் அடையாளம். ஆனால், பழனிசாமி ஆட்சியின் நிலைமை என்ன? “எப்போதுதான் முடியும் இந்த ஆட்சி” என்று, தன்மானம் உள்ள ஒவ்வொரு தமிழரும் காத்திருந்த நிலையில் தான் இருந்தது பழனிசாமி ஆட்சி.

ஆனால், திராவிட மாடல் ஆட்சி என்பது, ‘இது எங்களுடைய ஆட்சி, எங்களுக்கான ஆட்சி, எங்கள் வாழ்வை வளம் பெற வைக்கும் ஆட்சி, எந்நாளும் தொடர வேண்டும் திமுக ஆட்சி’ என்று மக்கள் விரும்பும் லட்சிய ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி விளங்குகிறது. கடந்தவாரம் மேற்கு மண்டலம், சில நாட்களுக்கு முன்பு தென் மண்டலம், இன்றைக்கு மத்திய மண்டலம் என்று தமிழ்நாட்டு மக்களாகிய உங்களுடன் இருக்கிறேன். இப்போது மட்டுமல்ல, கிட்டதட்ட 60 ஆண்டுகளாக நான் மக்களோடு தான் இருக்கிறேன். தேர்தலுக்காக வருபவன் அல்ல நான். உங்கள் தேவைகளை அறிந்து, தீர்த்து வைப்பதற்காக எப்போதும் உடனிருப்பவன்தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை மறந்துவிடாதீர்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# த.வெ.க. வழிகாட்டுதல் குழு அமைக்க விஜய் திட்டம்?

*சென்னை, நவ.18*

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கியிருக்கிறார்.

இந்த கட்சியின் முதல் மாநாடு கடந்த மாதம் 27ந்தேதி விக்கிரவாண்டியில் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.




மாநாட்டை தொடர்ந்து 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக்கழகம் தயாராகி வருகிறது. அதற்கேற்ப அரசியல் வியூகங்களை விஜய் அமைத்து வருகிறார்.

இந்த நிஅலையில், தமிழக வெற்றிக் கழகத்தில் வழிகாட்டுதல் குழு அமைக்க விஜய் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வழிகாட்டுதல் குழுவில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற, மாவட்ட நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் இடம்பெறவுள்ளதாகவும், சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குவது, மாவட்ட அளவிலான வழக்கறிஞர்கள் அணியை கட்டமைக்கும் பணியை இந்த குழு மேற்கொள்ளும் என தகவல் வெளியாகி உள்ளது.

# நயன்தாரா, தனுஷ் சண்டை தி.மு.க.வின் திசைதிருப்பும் வேலை: காயத்ரி ரகுராம் பேச்சு

*மதுரை, நவ.18*

மதுரையில் அ.தி.மு.க.வின் 53 வது ஆண்டு தொடக்கவிழா பொதுக் கூட்டம் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தலைமையில் நடைபெற்றது. அதில் திரைப்பட நடிகையும், அ.தி.மு.க. மகளிர் அணி துணைச் செயலாளருமான காயத்ரி ரகுராம் பங்கேற்று பேசியதாவது:

சமூக நீதி, சமூக நீதி என சொல்லும் தி.மு.க. சிறுபான்மையினருக்கு என்ன செய்துள்ளது. தனுஷ் நயன்தாரா பிரச்சனை இன்று விவாத மேடையில் செல்கிறது அதுவா நாட்டிற்கு முக்கியம்? நயன்தாரா நடித்து சம்பாதித்தால் என்ன, திருமண வீடியோவை விற்று சம்பாதித்தால் என்ன? தனுஷ் கூட சண்டை போட்டால் என்ன? போடாவிட்டால் என்ன? இது தி.மு.க.வின் திசைதிருப்பும் வேலை என்பது மக்களுக்கு நன்றாக தெரியும்.

ஆனால் இன்று போதைப்பொருள் ஒரு சாக்லேட் போல சாதாரணமாக அனைத்து மாணவர்களின் கைகளிலும் கிடைக்கிறது. மதுரையில் சாலைகள் மோசமாக இருக்கிறது. எந்த திட்டமும் மக்களுக்கு கிடைக்கவில்லை. படித்த திறமை வாய்ந்த ஒரு அமைச்சர் மதுரையில் இருந்தார். அவரும் தற்போது சைலன்ட் மோடுக்கு சென்று விட்டதால் மதுரை மக்கள் தி.மு.க. ஆட்சியில் திண்டாடி வருகிறார்கள்.

பெண்களுக்கு எதிரான ஒரு அரசு என்றால் அது தி.மு.க.தான். அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட தாலிக்கு தங்கம், தொட்டில் குழந்தை திட்டம் என மக்கள் பயன் பெறும் திட்டத்தை தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் நிறுத்தி விட்டனர். மக்களுக்கு தேவையான ஒரு நல்ல திட்டம் கூட தி.மு.க. அரசு செய்யவில்லை. சத்துணவு திட்டம் எம்.ஜி.ஆர் கொண்டு வந்தார். தற்போது காலை உணவு திட்டத்தில் எந்த ஒரு தரமும் இல்லை.



விளம்பரத்தில் மட்டும் தி.மு.க. வேற லெவலில் உள்ளது. மக்களுக்கான திட்டங்களில், செயல்பாடுகளில் ஒன்றும் இல்லை. உதயநிதி ஒரு செங்கலை வைத்து எல்லாரையும் ஏமாற்றி விட்டார். 2026ம் ஆண்டு தி.மு.க.வை மக்கள் நிச்சயமாக வீட்டிற்கு விரட்டி அடிப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# கோவையில் இந்து மக்கள் கட்சி தலைவர் கைது

*கோவை, நவ.18*

கோவை, ஈஷா யோகா மையம் குறித்து, அவதூறு பரப்பி வருவதாக கூறி, நக்கீரன் இதழை கண்டித்து ஹிந்து மக்கள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்ட த்தில் அக்கட்சியின் தலைவர் அர்ஜூன் சம்பத்தின் மகன், இளைஞரணி தலைவரான ஓம்கார் பாலாஜி, 'நக்கீரன் ஆசிரியர் கோபால் நாக்கை அறுப்பேன்' என்று பேசிய வீடியோ பரவியது. புகாரின் பேரில், அவர் கைது செய்யப்பட்டார். இவரது கைது கண்டித்து, தமிழகம் முழுவதும் இந்து மக்கள் கட்சி போராட்டம் அறிவித்து இருந்தது. கோவையில் ஆர்ப்பாட்டம் நடத்த வந்த கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத்தை, கோனிய ம்மன் கோவில் அருகே போலீசார் கைது செய்தனர். அதேபோல், செஞ்சிலுவை சங்கம் அருகே ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற ஒரு பெண் உள்ளிட்ட இந்து மக்கள் கட்சி தொண்டர்கள் 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

தினகனி



# எலி மருந்து விவகாரம்: தடை செய்யப்பட்ட மருந்தாக இருந்தால் நடவடிக்கை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



வேதாரண்யம், நவ.18

வளிமண்டல மேலடுக்கு சுழற்றி காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. மேலும் கடற்கரை பகுதிகளில் பலத்த காற்று வீசுகிறது.

இந்த நிலையில் நாகை மாவட்டம் வேதாரண்யம் கடல் உள்பகுதிகளில் வழக்கத்தை விட அதிகளவில் பலத்த காற்று வீசி வருகிறது.

இதனால் ஆறுகாட்டுதுறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் சுமார் 5000 மீனவர்கள் இன்று மீன் பிடிக்கச் கடலுக்கு செல்லவில்லை.

இதனால் 1000க்கும் மேற்பட்ட பைபர் படகுகள் பாதுகாப்பாக கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் பரபரப்பாக காணப்படும் கடற்கரை பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாததால் வெறிச்சோடி காணப்படுகிறது.

# பாரதம் தர்மத்தின் அடிப்படையிலானது கவர்னர் ஆர்.என்.ரவி



சென்னை, நவ.18

சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் ஒப்பிட்டு கவிதை நோக்கில் ஆய்வு செய்யும் பன்மொழி பன்னாட்டு கருத்தரங்கம் நடந்தது. இதில் திருவள்ளுவர் கபீர், தாசர் வேமனா ஆகிய மூவரின் மொழியியல் மற்றும் இலக்கிய திறன் குறித்து கலந்தாலோசனை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கவர்னர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது:

இந்த 2 நாட்கள் அறிவு சார் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. நாட்டின் வெவ்வேறு இடத்தில் இவர்கள் பிறந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமையை இவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இந்திய இலக்கியங்களை எந்த மொழியில் படித்தாலும் சில ஒற்றுமைகள் இருக்கும். எப்படி ஒற்றுமையோடு வாழ முடியும் என்பதை கோடிட்டு காட்டப்பட்டிருக்கும்.

இன்றைய கல்வி முறையில் நாம் பாரதம் என்றால் என்ன என்று நம் குழந்தைகளுக்கு சொல்வது இல்லை. இந்தியாவை தான் சொல்லி தருகிறோம். பாரதம் என்பது இந்தியாவை விட பெரியது.

பாரதம்என்பதுபொலிட்டிகள் ஸ்டேட் அல்ல. ஐரோப்பிய வகைப்படுத்துதலே பொலிட்டிகள் ஸ்டேட். பாரதம் அதை விட பெரியது.

பாரதம் இந்தியாவை விட பழமையானது. பாரத் என்று அழைக்கும் போது அரசியல் நாடு இல்லை. ஆனால் இந்தியா என்று அழைக்கும்போது பொது அரசியல் இருக்கிறது. ஒரு மரத்தின் இரு இலைகள் ஒன்று போல் இருப்பது இல்லை. ஆனால் அது வேறுவேறானவைஅல்ல. அது போல பாரதம் என்பது பிரிக்க முடியாதது. ஆனால் வேறு வேறானவை. ஆனால் ஒன்றானது அதனை பிரிக்க முடியாது.

பாரதம் என்பது மதத்தின் அடிப்படையிலானது இல்லை. தர்மத்தின் அடிப்படையிலானது. மதங்கள் அனைத்தும் சமம் என சொல்வது அரசியல் வாதம். ஒவ்வொரு மதங்களும் வெவ்வேறு கூறுகள் கொண்டவை. தர்மம் தான் அனைத்தையும் இணைப்பது.

பாரதம் என்றால் சாதி, மதம் இல்லை. பாரதம் என்பது தார்மீக தர்ம நாடு. நாம் எல்லாம் ஒரே குடும்பம் என்பதே பாரதம். இந்த ஒற்றுமையை இந்த மூன்று புலவர்களும் சொல்லி உள்ளதை பார்க்க முடிகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

# 2026ல் தமிழ்நாட்டில் அமையும் கூட்டணி ஆட்சியில் பா.ம.க.வும் இடம்பெறும்: அன்புமணி ராமதாஸ்



சென்னை, நவ.18

சென்னைகொரட்டூரில், ஜெமினி ரோட்டரி சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய அளவிலான பேட்மிட்டன் சாம்பியன்ஷிப் போட்டியை பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் பங்கேற்று விளையாடி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழக பேட்மிட்டன் சங்க தலைவராக 7 ஆண்டுகள் இருக்கிறேன். நான் வருவதற்கு முன்பு சிபாரிசு மூலம் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். நான் வந்த பிறகு திறமையின் அடிப்படையில் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். வெளிப்படையாக வீரர்களின் திறமைகளை தெரிந்துகொள்ளும் வகையில் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. அதனால் இன்று சர்வ தேச அளவில் பேட்மிட்டன் போட்டியில் தமிழக வீரர்கள் உள்ளனர்.

தி.மு.க. அரசு தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்ததை தற்போது வரை நிறைவேற்றவில்லை. தமிழக அரசின் நிர்வாக சிக்கல்கள் பல உள்ளது. 57 ஆண்டுகளாக தி.மு.க., அ.தி.மு.க. மாறி மாறி ஆட்சி செய்துள்ளனர். சென்னையின் நிலைமை மாறவில்லை.

தி.மு.க. 520 தேர்தல் வாக்குறுதிகளை கொடுத்தது. அதில் 490 வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றவில்லை.

அரசு மருத்துவர்கள் ஆனாலும் சரி தனியார் மருத்துவர்கள் ஆனாலும் சரி அவர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள். மருத்துவர்களின் சேவை மக்களை காப்பது தான். சிகிச்சை கொடுக்காமல் மருத்துவர்கள் மெத்தனமாக இருக்க மாட்டார்கள். உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று தான் எல்லா மருத்துவர்களும் நினைப்பார்கள். அரசு மருத்துவர்கள் முறையாக சிகிச்சை வழங்கவில்லை என்பது தவறு.

தமிழ்நாட்டில் 2026ல் கூட்டணி ஆட்சி அமைக்கும். அந்த கூட்டணியில் பா.ம.க. இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் 48 ஏழை ஜோடிகளுக்கு திருமணம்



சென்னை, நவ.18

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எளியோர் எழுச்சி நாள் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி 48 ஏழை ஜோடிகளுக்கு திருமண ஏற்பாடு செய்யப்பட்டது.

திருமண விழா நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு வடசென்னை சுங்கச்சாவடியில் உள்ள தங்கம்மாளிகையில்நடைபெறுகிறது.

48 ஜோடிகளின் மணவிழாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைக்கிறார். மணமக்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்து கூறுகிறார். திருமண விழாவில் சென்னை வடக்கு மாவட்டதி.மு.க.பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வரவேற்புரைநிகழ்த்துகிறார்.

பகுதி செயலாளர்கள் லட்சுமணன், ஜெயதாஸ் பாண்டியன், சுரேஷ், செந்தில் குமார், ஜெயராமன், முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

அமைச்சர்கள் பொன்முடி, பி.கே. சேகர்பாபு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.எல்.ஏ.க்கள், ஜே.ஜே. எபினேசர், ஐட்ரீம் மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

விழாவில் நிர்வாகிகள் இளைய அருணா, மனோகரன், இரா.கருணாநிதி, மதிவாணன், மருதுகணேசன், நரேந்திரன், வெற்றி வீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், கோபி உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள். முடிவில் வட்ட செயலாளர் என்.எம். கதிரேசன் நன்றி கூறுகிறார்.

# காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை ஒகேனக்கல்லில் நீர்வரத்து 10 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு

ஒகேனக்கல், நவ.18

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் கடந்த சில தினங்களாக நீர்வரத்து 10 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. கர்நாடகா மாநில அணைகளில் தண்ணீர் திறப்பு குறைவாலும், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைவாலும் கடந்த சில தினங்களுக்கு முன்பு தமிழக எல்லையான பிலிக்குண்டுலுவில் வினாடிக்கு 6 ஆயிரம் கன அடியாக குறைந்து வந்தது. இந்த நிலையில் கடந்த 2 தினங்களாக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன்காரணமாக தமிழககர்நாடகா எல்லையான பிலிக்குண்டுலு வழியாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன்காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நேற்று வினாடிக்கு 6500 கன அடியாக இருந்த நீர் வரத்து படிபடியாக அதிகரித்து இன்று காலை வினாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. இந்த நீர் வரத்து காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் உள்ள ஐந்தருவி, சினிபால்ஸ், மெயின் அருவி ஆகிய அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக மேலும் காவிரி ஆற்றில நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால், பிலிக்குண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# ராஜபாளையத்தில் போலீஸ்காரர்களின் லத்தியை பறித்து தாக்கிய 6 பேர் கைது



ராஜபாளையம், நவ.18

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் வடக்கு ஆவரம்பட்டி பாரதியார் தெருவில் புகார் மனு தொடர்பாக வடக்கு போலீஸ் நிலைய தலைமை காவலர்கள் இசக்கி, ராம்குமார் ஆகியோர் விசாரணை நடத்த சென்றனர்.

அப்போது அங்கிருந்த 6 பேர் கொண்ட கும்பல் போலீஸ்காரர்களை தடுத்து வாக்குவாதம் செய்ததாக கூறப்படுகிறது. அவர்களை போலீசார் எச்சரித்தனர். இருப்பினும் அந்த கும்பல் அத்துமீறி நடந்து கொண்டதோடு இசக்கி, ராம்குமார் வைத்திருந்த லத்தி கம்புகளை பிடிங்கி அவர்களையே சரமாரியாக தாக்கினர்.

இதில் படுகாயமடைந்த 2 பேரும் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. விசாரணைக்கு சென்ற போலீஸ்காரர்கள் லத்தியால் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக இன்ஸ்பெக்டர் அசோக்பாபு, சப் இன்ஸ்பெக்டர் அஜித்குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு போலீஸ்காரர்களை தாக்கியவர்களை தீவிரமாக தேடி வந்தனர்.

தொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பாக கீழ பால்பாண்டி (வயது 31), கிளிராஜன் (24), பாஞ்சாலி ராஜா (40) பாண்டிய ராஜ்(22) ஆகிய 4 பேரை தட்டிதூக்கி கைது செய்தனர்.

மேலும் தலைமறைவாக இருந்த ராமநாதன் மகன் சரவணகார்த்திக்(33), சேவகன் மகன் முத்துராஜ்(34) ஆகியோரை போலீசார் தேடி வந்த நிலையில் நேற்று 2 பேரும் கைது செய்யப்பட்டனர்.

# தேசிய அளவிலான 'ட்ராக் சைக்கிளிங்' போட்டி: உதயநிதி தொடங்கி வைத்தார்



திருப்போரூர், நவ.18

வண்டலூர் அடுத்த மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் தேசிய அளவிலான ட்ராக் சைக்கிளிங் போட்டியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

19ந்தேதி வரை நடைபெறும் இப்போட்டிகளில் 28 மாநிலங்கள் 8 யூனியன் பிரதேசங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட சைக்கிள் வீரர்கள் கலந்து கொள்கின்றனர். விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் எம்.பி.செல்வம், செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண்ராஜ், திருப்போரூர் ஒன்றிய குழு தலைவர் எல். இதயவர்மன், ஒன்றிய குழு துணை தலைவர் சத்யா சேகர், தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் சேகர், மேலக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் கௌதமி ஆறுமுகம், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுரேஷ், அருண்குமார்.

திருப்போரூர் பேரூராட்சி தலைவர் தேவராஜ், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எக்ஸ்பிரஸ் எல்லப்பன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ராணி எல்லப்பன், தாரா சுதாகர், மகாலட்சுமி ராஜாராம், புதுப்பாக்கம் ஆறுமுகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு திருப்போரூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய குழு தலைவர் எல்.இதய வர்மன் தலைமையில் மேலக்கோட்டையூர் எல்லையில் இருந்து பூக்கள் தூவி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# டீசல் மீதான வரி விதிப்பை கைவிட வேண்டும் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்



சென்னை, நவ.18

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சொத்து வரி, குடிநீர் வரி, மின் கட்டணம், வழிகாட்டி மதிப்பு, பதிவுக் கட்டணம், வாகன வரி, முத்திரைத்தாள் கட்டண உயர்வு என மாநில அரசின் பல வரி உயர்வுகளால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், டீசல் மீதான கூடுதல் வரி என்பது அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலையை மேலும் உயர்த்த வழிவகுக்கும். மத்திய அரசு விதிக்கும் கூடுதல் வரியை எதிர்க்கும் தி.மு.க., மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை குறைக்க வேண்டுமென்று கோருகின்ற தி.மு.க., தற்போது தமிழ்நாட்டில் டீசல் மீதான கூடுதல் வரியை உயர்த்துவது எந்தவிதத்தில் நியாயம்?

தி.மு.க. அரசின் இது போன்ற நடவடிக்கை சாமானிய மக்களை வெகுவாக பாதிப்பதோடு, ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் குறைந்தபட்சம் மாதம் ஆயிரம் ரூபாய் அளவுக்கு நிதிச் சுமையை ஏற்படுத்தும். தி.மு.க. அரசின் இந்த முயற்சிக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற வரி விதிப்பு தி.மு.க. ஆட்சியை நிச்சயம் முடிவுக்கு கொண்டு வரும். முதலமைச்சர் இதில் தனிக்கவனம் செலுத்தி, டீசல் மீது கூடுதல் வரி விதிக்கும் முயற்சியை கைவிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மேற்கு தொடர்ச்சி மலையில் கனமழை: மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்வு



நெல்லை, நவ.18

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது.

நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் 2 நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. மாவட்டத்தின் பிரதான அணையான 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணைக்கு 1,504 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து பாசனத்திற்காக 1,375 கன அடி நீர்வந்து கொண்டிருக்கிறது. அந்த அணைநீர்மட்டம் 84.25 அடி நீர் இருப்பு உள்ளது. இன்று காலை நிலவரப்படி அந்த அணை பகுதியில்28மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது.

மற்றொரு பிரதான அணையான 118 அடி கொண்ட மணிமுத்தாறு அணைக்கு வினாடிக்கு நேற்று காலை வரை குறைவான நீர்வரத்து இருந்த நிலையில், இன்று காலை வினாடிக்கு 1,375 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அந்த அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 67 அடியை எட்டியுள்ளது. அங்கு 30.6 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. தொடர் மழையால் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மணிமுத்தாறு அருவியில் 3வது நாளாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சேர்வலாறு அணை நீர்மட்டம் 82.47 அடியாக உள்ளது. கொடுமுடியாறு அணை பகுதியில் 17 மில்லிமீட்டரும், நம்பியாறு அணை பகுதியில் 11 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது. மேலும் கன்னடியன் கால்வாய் பகுதியில் 35 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

மாநகரில் நேற்று பரவலாக மழை பெய்த நிலையில், இன்று அதிகாலையில் இருந்து வானம் மேகமூட்டமாக காட்சியளித்தது.

தொடர்ந்து காலையில் சாரல் மழை பரவலாக பெய்தது. அதன்பின்னர் வெயில் அடிப்பதும், மழை சாரலாக பெய்வதுமாக இருந்து வந்தது. பாளையில் 11.4 மில்லிமீட்டரும், நெல்லையில் 7.4மில்லிமீட்டரும்மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தை பொறுத்தவரை பரவலாக கனமழை பெய்தது. குறிப்பாக அம்பை, நாங்குநேரி, களக்காடு, மூலைக்கரைப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. களக்காட்டில் 15 மில்லி மீடடரும், அம்பையில் 26 மில்லிமீட்டரும், நாங்குநேரி, மூலைக்கரைப்பட்டியில் தலா 16 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

தென்காசி மாவட்டத்தில் நேற்று பகலில் தொடங்கி இரவு வரையிலும் பெரும்பாலான இடங்களில் சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. தென்காசியில் 7 மில்லிமீட்டரும், செங்கோட்டையில் 9 மில்லி மீட்டரும், ஆய்குடி யில் 17 மில்லிமீட்டரும் மழை பதிவாகியது.

மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள கடனா, ராமநதி, கருப்பா நதி, குண்டாறு அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக கடனா அணை பகுதியில் 23 மில்லிமீட்டரும், ராமநதியில்15மில்லிமீட்டரும், குண்டாறில் 12 மில்லிமீட்டரும், கருப்பா நதியில் 10 மில்லிமீட்டரும் மழை பெய்தது. அடவிநயினார் அணை பகுதியில் 5 மில்லி மீட்டரும் மழை பெய்தது.

மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த கன மழை காரணமாக குற்றாலம் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. அங்கு ஐயப்ப பக்தர்கள் மாலை அணிவித்து புனித நீராடியதால் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர், காயல்பட்டினம், குலசேகரன்பட்டினம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்தது. தூத்துக்குடி, ஒட்டப்பிடாரம், கடம்பூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்திலும் கன மழை பெய்தது. இன்று காலையில் சில இடங்களில் சாரல் மழையும், ஒரு சில இடங்களில் வெயிலும் அடித்தது. திருச்செந்தூரில் 39 மில்லி மீட்டரும், ஒட்டப்பிடாரம், காயல்பட்டினத்தில் தலா 36 மில்லிமீட்டரும், குலசேகரன்பட்டினத்தில் 21 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

# தேனி மாவட்டத்தில் வாக்காளர் சிறப்பு முகாம் மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி, நவ 18

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சியில் உள்ள . கொண்டுராஜா நினைவு மேல்நிலைப்பள்ளி, குன்னூர் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி மற்றும் பழனிசெட்டியில் உள்ள பழனியப்பா நினைவு ஆரம்ப பள்ளி ஆகிய இடங்களில் வாக்காளர் சிறப்பு சுருக்கத்திருத்தப் பணிகள் நடைபெற்று வருதை மாவட்ட கலெக்டர் ஆர்.வி.ஷஜீவனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்த முகாமில் 18 வயது நிரம்பிய அனைவரும் தங்களுடைய வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், மற்றும் ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களுக்கு தேவையான முகவரி மாற்றம், பிழைத்திருத்தம், புகைப்பட மாற்றம், மாற்று வாக்காளர் அடையாள அட்டை போன்றவைகளை மேற்கொள்ளவும், இடம் பெயர்ந்த மற்றும் இறந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குதல் தொடர்பான சிறப்பு சுருக்கத்திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, இன்று மற்றும் நாளையும் முதற்கட்ட சிறப்பு முகாம் மற்றும் 23.11.2024 (சனி), 24.11.2024 (ஞாயிறு) ஆகிய தேதிகளில் இரண்டாம் கட்ட சிறப்பு முகாம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளது. இந்த சிறப்பு சுருக்கத் திருத்த முகாமினை வாக்காளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்கள்.

முன்னதாக, தேனி நகரில் சுகாதாரப்பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் போது தேனி அல்லி நகரம் நகராட்சி ஆணையாளர் ஏகராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிச்செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# பரமத்திவேலூர் அருகே லாரிசரக்கு ஆட்டோ மோதி விபத்து 3 தொழிலாளர்கள் பலி

பரமத்திவேலூர், நவ.18

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா கபிலர்மலை பகுதியைச் சேர்ந்தவர் சாமிநாதன். ஆட்டோ டிரைவர்.

இவர் ஈரோட்டில் ஒரு திருமண மண்டபத்திற்கு அலங்காரம் செய்வதற்காக அலங்காரப் பொருட்களை சரக்கு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு கபிலர்மலை அருகே சிறுகிணத்துப்பாளையம் பகுதியை சேர்ந்த மோகன் என்பவரது மகன் சிவநாதன் (வயது20.), கபிலர்மலை அருகே உள்ள கருக்கம்பாளையம் பகுதியை சேர்ந்த முருகேசன் மகன் சிவா (வயது19), அதே பகுதியைச் சேர்ந்த பூவேஷ், வெங்கரைப் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் ஆகியோரை சரக்கு ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு ஈரோடு பகுதிக்கு சென்றார்.

பின்னர் திருமண மண்டபத்தில் அலங்காரம் செய்துவிட்டு மீண்டும் கபிலர்மலை வருவதற்காக ஜேடர்பாளையம் வந்து ஜேடர்பாளையத்திலிருந்து பரமத்தி செல்லும் சாலையில் நள்ளிரவு சுமார் 2 மணி அளவில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது ஜேடர்பாளையம் அருகே தண்ணீர் பந்தல் என்ற பகுதி அருகே சென்று கொண்டிருந்த போது பரமத்தியில் இருந்து ஜேடர்பாளையம் நோக்கி அதிவேகமாக வந்த லாரியும், சரக்கு ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்தானது.

இதில் சரக்கு ஆட்டோவில் இருந்த சிவநாதன், சிவா ஆகியோருக்கு தலை மற்றும் பல்வேறு பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் இருந்தனர். அதேபோல் பூவேஷ், ரமேஷ், ஆட்டோ டிரைவர் சாமிநாதன் ஆகிய 3 பேருக்கும் தலை மற்றும் பல்வேறு பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதை பார்த்த அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு சிவநாதன் மற்றும் சிவா, பூவேஷ், ரமேஷ், சாமிநாதன் ஆகிய 5 பேரையும் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் சிவநாதன் மற்றும் சிவா ஆகிய இருவரும் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

அதேபோல் பூவேஷ், ரமேஷ், சாமிநாதன் ஆகிய 3 பேருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பூவேஷை பரிசோதனை செய்த டாக்டர்கள் வரும் வழியில் இறந்து விட்டதாக தெரிவித்தனர். தொடர்ந்து ரமேஷ், சாமிநாதன் ஆகிய 2 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து ஜேடர்பாளையம் போலீசார் வழக்கு பதிவு செய்து சிவநாதன் மற்றும் சிவா, பூவேஷ் ஆகியோரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பரமத்திவேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கடம்பூர் வனப்பகுதியில் சாலையை கடந்து சென்ற புலி வாகன ஓட்டிகள் பீதி



ஈரோடு, நவ.18

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இங்கு யானை, புலி, சிறுத்தை, கரடி, மான், காட்டெருமை உள்பட ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. கடந்த சில நாட்களாக திம்பம், தாளவாடி, ஆசனூர், கடம்பூர் வனப்பகுதியில் மழை பரவலாக பெய்து வருவதால் வனப்பகுதியில் பசுமையான சூழ்நிலை உள்ளது. மரம், செடி, கொடிகள் பசுமையாக காட்சியளிக்கின்றன. வனப்பகுதியில் உள்ள நீர்நிலைகளும் நிரம்பியுள்ளன.

இந்நிலையில் சத்தியமங்கலம் அடுத்த கடம்பூரில் இருந்து குத்தியாலத்தூர் செல்லும் சாலையில் வாகன ஓட்டிகள் சென்று கொண்டு இருந்தனர். அப்போது குத்தியாலத்தூரில் வனப்பகுதியில் இருந்து சாலையை கடந்து ஒரு புலி மற்றொரு வனப்பகுதிக்கு சென்றது.

இதை கண்ட வாகன ஓட்டிகள் பீதியடைத்தனர். பின்னர் தங்களது வாகனங்களை சிறிது தூரம் முன்பே நிறுத்தி விட்டனர். அந்த புலி மெதுவாக சாவகாசமாக வனப்பகுதியில் இருந்து வெளியேறி சாலையில் சிறிது தூரம் நடமாடி பின்னர் மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றது.

புலி வனப்பகுதிக்குள் சென்றவுடன் வாகன ஓட்டிகள் அங்கிருந்து கிளம்பி சென்றனர். புலி சாலையை கடந்து செல்லும் காட்சியை வாகன ஓட்டி ஒருவர் செல்போனில் வீடியோவாக பதிவு செய்து அதை சமூக வலைதளங்களில் வெளியிட்டார். தற்போது அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது.

தாளவாடி, கடம்பூர் வனப்பகுதியில் யானை, புலிகள் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. தற்போது குத்தியாலத்தூர் வனப்பகுதியில் புலி நடமாட்டம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே வாகன ஓட்டிகள் இந்த பகுதியை கடந்து செல்லும் போது கவனத்துடன் செல்ல வேண்டும். குறிப்பாக இரு சக்கர வாகனத்தில் சொல்லும் வாகன ஓட்டிகள் எக்காரணம் கொண்டும் வனப்பகுதியில் வாகனத்தை நிறுத்த வேண்டாம் என்றனர்.

# ஆம்னி வேனில் 500 கிலோ ரேசன் அரிசி பறிமுதல் 2 பேர் கைது



சிவகிரி, நவ.18

கோவை மண்டலம் குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத்துறை காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன் உத்தரவின் படி, ஈரோடு சரகம் காவல் துணை கண்காணிப்பாளர் ராஜபாண்டியன் மேற்பார்வையில் ஈரோடு குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் சுதா தலைமையில் போலீசார் சிவகிரி காவல் நிலைய சரகம் பாரப்பாளையம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக ஒரு ஆம்னி வேன் வந்தது. அந்த ஆம்னிவேனை நிறுத்தி போலீசார் சோதனை செய்தபோது அதில் 500 கிலோ ரேசன் அரிசி கடத்தி வரப்பட்டது தெரியவந்தது.

இதனையடுத்து வேனில் இருந்த 2 பேரிடம் போலீசார் விசாரணை நடத்திய போது அவர்கள் ஈரோடு மாவட்டம் கொடுமுடி, வி.அருக்கம்பாளையம், போறகாட்டுப்புதூர் பகுதியைச் சேர்ந்த ரவி(34), திருப்பூர் மாவட்டம் முத்தூர் ரோடு அரிமொழி நகரைச் சேர்ந்த சுரேஷ் (40) ஆகியோர் என்பதும், இவர்கள் ரேசன் அரிசியை ஒத்தப்பனை, தாண்டாம்பாளையம் பகுதியில் உள்ள பொதுமக்களிடம் வாங்கி 3 ரோடு எம்மாம்பாளையம் பகுதியில் உள்ள நார் மில் மற்றும் ஸ்பின்னிங் மில்களில் வேலை செய்யும் வட மாநில தொழிலாளர்களுக்கு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி ஆம்னி வேனில் கடத்தி வந்தது விசாரணையில் தெரியவந்து.

இதனையடுத்து ரவி மற்றும் சுரேஷை கைது செய்த போலீசார் அவர்களிடமிருந்து 500 கிலோ ரேசன் அரிசி மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆம்னி வேனையும் பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு கோபிசெட்டிபாளையம் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஏற்காட்டில் பனிமூட்டத்துடன் கூடிய சாரல்மழை; இதமான காலநிலையை அனுபவிக்கும் சுற்றுலா பயணிகள்

சேலம், நவ.17

ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் ஏற்காட்டில் விடுமுறை தினத்தையொட்டி இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் அண்ணா பூங்கா, ஏரி பூங்கா, லேடிஸ் சீட், பக்கோடா பாயின்ட், ரோஜா தோட்டம், சேர்வராயன் கோவில், பொட்டானிக்கல் கார்டன், ஐந்திணை பூங்கா போன்ற இடங்களில் குடும்பத்துடன் சென்று ரசித்தனர். இதனிடையே ஏற்காட்டில் இன்று மதிய வேளையிலும் பனி மூட்டம் நிலவியது. பனிமூட்டத்துடன் கூடிய மிதமான சாரல்மழையும் பெய்தது. அங்கு நிலவும் இதமான காலநிலையை சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியாக அனுபவித்து வருகின்றனர். மேலும் இயற்கை காட்சிகளை ரசித்தவாறு படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்.

சுற்றுலா பயணிகள் வாகனங்கள் அதிகளவில் வந்ததால் ஒண்டிக்கடை ரவுண்டானா, அண்ணா பூங்கா சாலை உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு உதவ தகவல் மையம்: அமைச்சர் தகவல்



சென்னை, நவ.18

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜை 15.11.2024 முதல் 26.12.2024 வரையும் மற்றும் மகர விளக்கு ஜோதி திருவிழா 30.12.2024 முதல் 19.01.2025 வரையும் நடைபெறுவதை முன்னிட்டு சபரிமலை பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஐயப்ப பக்தர்களுக்கு உதவுவதற்காக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் மையம் 24.01.2025 வரை செயல்படும். தமிழ்நாட்டிலிருந்து சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்கள் இத்தகவல் மையச்சேவையினை கட்டணமில்லா தொலைபேசி எண்களான 04428339999 மற்றும் 18004251757ல் அழைத்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தாராபுரம் ஊராட்சி ஒன்றிய வாக்குச்சாவடி மையங்களில் திமுக ஒன்றிய செயலாளர் எஸ் வி எஸ் பார்வையிட்டார்



தாராபுரம், நவ 18

வாக்குச்சாவடி மையங்களில் புதிய வாக்காளர் சேர்க்கை, பெயர் நீக்கம், பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தம் முதலான செயல்பாடுகள் நடைபெறுவதையொட்டி, திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளரும் கோவை வடக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளருமான கணேஷ் தலைமையில், தாராபுரம் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவரும் என்று திமுக ஒன்றிய செயலாளருமான எஸ் வி செந்தில்குமார் ஆகியோர் பார்வையிட்டார். அப்போது மாவட்டத் துணைச் செயலாளர் பிரபாவதி பெரியசாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு, ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் சசிகுமார், கோணப்பஞ்சாலை ராஜாமணி, ஒன்றிய துணைச் செயலாளர் புவனேஸ்வரி இளங்கோ, நடராஜ் மற்றும் பி எல் ஏ 2 முகவர்கள், முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கோவையில் லாட்டரி அதிபர் மார்ட்டின் வீடு உள்பட 5 இடங்களில் 3வது நாளாக சோதனை



கோவை, நவ.18

கோவையை சேர்ந்த தொழில் அதிபர் மார்ட்டின் பல்வேறு மாநிலங்களில் லாட்டரி விற்பனையில் முக்கிய பங்கு வகித்து வருகிறார்.

இவர் சிக்கிம் மாநிலத்தில் லாட்டரி விற்பனையில் முறைகேடு செய்து ரூ.910 கோடியை பல்வேறு நிறுவனங்களில் முதலீடு செய்ததாக தெரிகிறது. இது தொடர்பாக அமலாக்கத்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக கடந்த ஆண்டு 2 முறை மார்ட்டின் வீடு, அவருடைய அலுவலங்களில் வருமான வரிசோதனை நடத்தினர். அதில் கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் முதல் சென்னை, கோவையில் உள்ள மார்ட்டின் வீடு, அலுவலகங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

2வது நாளாக கோவை, சென்னையில் சோதனை நடந்தது. இதற்கிடையே சென்னையில் உள்ள மார்ட்டின் அலுவலகத்தில் இருந்து ரூ.8 கோடியே 80 லட்சம் சிக்கியதாக அமலாக்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இன்று 3வது நாளாக கோவையில் உள்ள மார்ட்டின் வீடு, அலுவலகம் மற்றும் மருத்துவக்கல்லூரியில் சோதனை நடந்தது. இதே போன்று மார்ட்டினின் உறவினர்களான கோவை சிவானந்தபுரத்தில் உள்ள ஜான் பிரிட்டோ என்பவரது வீடு, சிவானந்தா காலனியில் உள்ள அந்தோணியா ஆகியோரது வீடுகளிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

சோதனை நடைபெறும் இடங்களில் மத்திய தொழில் பாதுகாப்பு படை அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# பிரசவத்தின் போது அலட்சியமாக கர்ப்பிணியின் மலக்குடலை கத்தரித்த விவகாரம்; நடவடிக்கை எடுக்க ஐகோர்ட் உத்தரவு



மதுரை, நவ.18

தென்காசி மாவட்டம் சுரண்டையைச் சேர்ந்த ராஜன், ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

எனது மனைவி கடந்த 2021ம் ஆண்டில் கர்ப்பிணியாக இருந்தார். அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டதால், அதே ஆண்டு நவம்பர் 6ந் தேதி தென்காசி முடியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அழைத்து சென்றேன். அப்போது அங்கு பணியில் இருந்த அரசு டாக்டர், என் மனைவியை பரிசோதித்தார். சில மணி நேரத்துக்கு பின்பு அறுவை சிகிச்சை மூலம் குழந்தையை எடுக்க வேண்டும் என்றும் அதற்கான உபகரணங்கள் வீட்டில் இருப்பதாகவும் கூறி, காலம் கடத்தினார்.

என் மனைவிக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படாததால் ரத்தப்போக்கு ஏற்பட்டு, குழந்தை இறந்து விட்டதாக தெரிவித்தனர். என் மனைவி உடல் நிலை மிக மோசமானதால், அவரை தென்காசி அரசு மருத்துவமனைக்கும் பின்னர் மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவ மனையில் சேர்த்து, 60 நாட்கள் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் அவர் குணமாகாததால், தனியார் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்றார்.

இதனிடையே, ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது மனைவிக்கு நடந்த அறுவை சிகிச்சையின் போது தவறுதலாக மலக்குடலை கத்தரித்தது தெரியவந்தது. இதனால் அவர் கடும் அவதிக்கு ஆளானார். ஆரம்ப சுகாதார நிலைய டாக்டரின் அலட்சியத்தால் ஏராளமான பணத்தையும் செலவு செய்து, மன உளைச்சலுக்கு ஆளானோம். எனவே சம்பந்தப்பட்ட டாக்டர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி விக்டோரியா கவுரி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் வக்கீல் கே.ஆர்.பாரதி கண்ணன் ஆஜராகி வாதிட்டார். விசாரணைமுடிவில், மனுதாரர் புகார் குறித்து முறையாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தனர்.

# உடுமலை பஞ்சலிங்க அருவியில் நீர்வரத்து அதிகரிப்பு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

உடுமலை, நவ.18

திருப்பூர் மாவட்டம் உடுமலை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் லேசான தூரலுடன் மழை பெய்தது. இதனால் வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்று முதல் இன்று காலை வரை பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு: அவினாசி24, உப்பாறு அணை18, குண்டடம்10, நல்லதங்காள் ஓடை அணை20, அமராவதி அணை 20. மாவட்டம் முழுவதும் 164 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

இந்த மழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் சேதமான சாலைகள் சேறும் சகதியுமாக மாறி காட்சியளிக்கிறது. இதனால் அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் அவதியடைந்து வருகின்றனர்.

தின கனி

18.11.2024

# புதுக்கோட்டை ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவிலில் சபரி மலைக்குச் செல்லும் பக்தர்கள் விரதமாலை அணிந்து கொண்டனர்





புதுக்கோட்டை, நவ 18

புதுக்கோட்டை சின்னப்பா நகரில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவிலில் சபரி மலைக்குச் செல்லும் பக்தர்கள் விரதமாலை அணிந்து கொண்டனர் .கார்த்திகை முதல்நாளில் விரதத்தை தொடங்கும் பக்தர்கள். ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவிலில் பக்தர்கள் விரதமாலை அணிந்து கொண்டனர்

காலையில் ஆலயத்தில் உள்ள ஸ்ரீ ஐயப்ப சுவாமி உற்சவருக்கும் மூலவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள் தீபாரதனை காளீஸ்வரர் குருக்கள்தலைமையில் நடந்தது ஏராளமான ஐயப்ப பக்தர்கள் வருகை தந்து விரத மாலை அணிந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர்

இதே போன்று நகரில் திருவப்பூர் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில், சீதபதி ஸ்ரீ கிருஷ்ண விநாயர் கோவில் தண்டாயுதபாணி திருக்கோவில் உள்ளிட்ட கோவில்களில் சபரி மலைக்குச்செல்லும் பக்தர்கள் விரதமாலை அணிந்து கொண்டனர் சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் விரதமிருந்து செல்கின்றனர். இதற்காக, கார்த்திகை முதல் நாளில் மாலை அணிந்து விரதத்தை தொடங்குகின்றனர். ஒரு மண்டலம் விரதம் மேற்கொண்டு, மகர ஜோதியைக் காண பலரும் செல்வர். அதுவரை தினமும் காலை, மாலை வேலைகளில் குளித்து சரண கோஷம் சொல்லி, ஐயப்பனை வணங்கி விரதம் மேற்கொள்கிறார்கள். சபரிமலைக்கு தமிழகத்தில் இருந்துதான் அதிகமான பக்தர்கள் செல்கின்றனர்

# எஸ்.ஆர்.எம்.பல்கலை. 20வது சிறப்பு பட்டமளிப்பு விழா: 10,848 மாணவ மாணவியர் பட்டம் பெற்றனர்




செங்கல்பட்டு, நவ 18

செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு அடுத்த காட்டாங்குளத்தூரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்., கல்வி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 20வது சிறப்பு பட்டமளிப்பு விழா, நவம்பர் 15ஆம் தேதி நடைபெற்றது.

இந்த பட்டமளிப்புநிகழ்வில் அறிவியல் மற்றும் மனிதவியல், மருத்துவம் மற்றும் சுகாதார அறிவியல், மேலாண்மை, சட்டம் மற்றும் வேளாண்மை ஆகிய துறைகளில், 10,848 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக, அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் முன்னாள் இயக்குநர், பேராசிரியர் மகேஷ் சந்திர மிஸ்ரா அவர்கள், கலந்துகொண்டார். அனைத்து துறைகளிலும் பட்டம் பெரும் மாணவர்கள், தங்களது வாழ்வில் முழுமையடைய, பல்வேறு நெறிமுறைகளை தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

எஸ்.ஆர்.எம்., பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் டி. ஆர். பாரிவேந்தர்; எஸ்.ஆர்.எம்.,இன் இணை வேந்தர் கல்விசார் டாக்டர். பி. சத்தியநாராயணன், ஆகியோர் இவ்விழாவை தலைமை தாங்கினர்.

மேலும் இவ்விழாவில், எஸ்.ஆர்.எம்., துணைவேந்தர் பேராசிரியர் சி. முத்தமிழ்ச்செல்வன், வருடாந்திர அறிக்கையை வழங்கினார்.

# சிதம்பரம் நகராட்சியில் புணரமைக்கப்பட்ட பூங்காக்கள் திறப்பு: நகராட்சி சேர்மன் செந்தில்குமார் திறந்து வைத்தார்




சிதம்பரம், நவ 18

சிதம்பரம் நகராட்சியில் ரூ.68 லட்சம் மதிப்பீட்டில் 4 பூங்காக்கள் புணரமைக்கப்பட்டு, நகராட்சி சேர்மன் கே.ஆர்.செந்தில்குமார் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். சிதம்பரம் நகராட்சியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.18 லட்சம் செலவில் புணரமைக்கப்பட்ட மன்மதசாமிநகர் பூங்கா, ரூ.20 லட்சம் செலவில் புணரமைக்கப்பட்ட வாகீசநகர் பூங்கா, ரூ.19 லட்சம் மதிப்பீட்டில் புணரமைக்கப்பட்ட சுசிலாம்பாள் நகர் பூங்கா மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புணரமைக்கப்பட்ட காந்தி பூங்கா ஆகியவற்றை சேர்மன் கே.ஆர்.செந்தில் குமார் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சிகளுக்கு நகராட்சி ஆணையாளர் மல்லிகா, பொறியாளர் சுரேஷ், பொதுப்பணித் துறை மேற்பார்வையாளர் ரம்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மூத்தமருத்துவர் முத்துக்குமரன், பேராசிரியர் கணபதி, நகரமன்ற துணைத் தலைவர் முத்துக்குமார், கிரீடு தொண்டு நிறுவன செயலாளர் நடனசபாபதி. தில்லை சீனு, மூத்த நகரமன்ற உறுப்பினர் ரமேஷ், நகராட்சி கவுன்சிலர்கள் அப்புசந்திரசேகரன், மணிகண்டன், அசோகன், ஷகிலா இஸ்மாயில், கவிதா சரவணன், கல்பனா சண்முகம், புகழேந்தி, சரவணன், இந்துமதி அருள், லதா, சுதா, பூங்கொடி, வளர்மதி, திமுக நகர துணை செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், இளங்கோ, மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் மக்கள் அருள், தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஸ்ரீதர் கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மக்களுக்காக உழைத்த கலைஞர் பெயரை வைக்காமல் வேறுயார் பெயரை வைக்க முடியும்?: உதயநிதி ஸ்டாலின் கேள்வி



சென்னை, நவ.18

சென்னை ஆர்.கே.நகரில் திமுக சார்பில் நடைபெற்ற 'எளியோர் எழுச்சி நாள்' கொண்டாட்டத்தில் 48 இணையர்களுக்கு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருமணம் நடத்தி வைத்தார். மேலும் மணமக்களுக்கு ரூ.25 ஆயிரம் ரொக்கம் மற்றும் கட்டில், பீரோ உள்ளிட்ட 30 பொருள்கள் அடங்கிய சீர் வரிசையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

எனக்கு 48 வயதாகிவிட்டது என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டியதில்லை; 48 வயதை சொல்லும் வகையில் 48 ஜோடிக்கு திருமண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இல்லத்தில் 2 திருமணம் நடத்தி வைத்தேன், அப்படியென்றால் 50 வயது ஆகிவிட்டதா?.

திமுக ஆட்சியின் திட்டங்களை மக்கள் கொண்டாடுவதை பார்த்து எடப்பாடி பழனிசாமிக்கு கோவம், எரிச்சல் வருகிறது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை மக்கள் வாழ்த்துகிறார்கள்; அது அவருக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமின்றி அரசின் திட்டங்களுக்கு கலைஞர் பெயரை வைப்பது பற்றி எடப்பாடி பழனிசாமி கேள்வி கேட்கிறார்.

தன்னுடைய 96 வயது வரை தமிழ்நாட்டுக்காக, தமிழ் மக்களுக்காக ஓயாது உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர்பெயரைசூட்டாமல் வேறுயார் பெயரை வைக்க முடியும். கூவத்தூரில் ஊர்ந்து போன கரப்பான் பூச்சியின் பெயரை வைக்கலாமா?. ஜெயலலிதா பெயரை வைத்தால் கூட எடப்பாடி பழனிசாமி ஏற்றுக்கொள்ள மாட்டார். அவருக்கு மோடி அல்லது அமித்ஷா பெயரைதான் வைக்க வேண்டும்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் பாஜகவுடன் கூட்டணி கிடையாது என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்; ஆனால் சேலத்தில் ஐ.டி.ரெய்டுநடந்தஅடுத்த நாளே கூட்டணி குறித்து தற்போது பேச முடியாது.. தேர்தல் நேரத்தில் பேசிக் கொள்ளலாம் என மாற்றி பேசியுள்ளார் எடப்பாடி பழனிசாமி. இன்னும் ஒரு ரெய்டு நடந்தால் அதிமுகவையே பாஜகவுடன் இணைத்து விடுவார். இது தான் அதிமுகவின் நிலைமை.

2026 தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். அரசின் திட்டங்களை ஒவ்வொரு வீடாக சென்று மக்களிடம் எடுத்து கூற வேண்டும்.

இலக்கு 200 என்பதை மனதில் வைத்துக் கொண்டு ஒவ்வோரு வாக்களர்களையும் தேர்தலுக்கு முன்பாக 4 முதல் 5 முறை சந்தித்து பேசி அவர்களிடம் நமது திட்டங்களை பற்றி பேசவேண்டும். 7வது முறையாக திமுகவை ஆட்சி கட்டிலில் அமர வைக்க அயராது உழைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஒன்ஸ்மோர் படத்தின் 2வது சிங்கிள் 'இதயம்' ரிலீஸ்




அறிமுக இயக்குநர் விக்னேஷ் ஸ்ரீகாந்த் இயக்கத்தில் அர்ஜுன் தாஸ் மற்றும் அதிதி ஷங்கர் ஆகியோர் முதன்மையான கதாபாத்திரத்தில் நடிக்கும் படம் ஒன்ஸ் மோர்.


அரவிந்த் விஸ்வநாதன் ஒளிப்பதிவு செய்யும் இந்த திரைப்படத்தின் படத்தொகுப்பு பணிகளை நாஷ் மேற்கொள்கிறார். ராஜ்கமல் கலை இயக்கத்தை கவனிக்க, நவா ராஜ்குமார் ஆடை வடிவமைப்பாளராக பணியாற்றுகிறார்.

ஒன்ஸ் மோர் திரைப்படம் அடுத்தாண்டு பிப்ரவரி மாதம் வெளியாகவுள்ளது.

மலையாள பிரபல இசையமைப்பாளரான ஹேஷம் அப்துல் வஹாப் இசையமைத்துள்ள இந்த படத்தின் ஃபர்ஸ் சிங்கிள் "மிஸ் ஒருத்தி" பாடல் வெளியானது.

இந்நிலையில், ஒன்ஸ்மோர் படத்தின் இரண்டாவது சிங்கிள் பாடலான "இதயம்" பாடல் வெளியானது.

# வெளியாகும் 'புஷ்பா 2' டிரைலர்..




சுகுமார் இயக்கத்தில் புஷ்பா படத்தின் இரண்டாவது பாகம் புஷ்பா 2 தி ரூல் என்ற பெயரில் உருவாகியுள்ளது. படத்தில் அல்லு அர்ஜுன் உடன் ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில் உள்பட பலர் நடித்துள்ளனர். படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். படத்தின் சில பாடல்கள் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

புஷ்பா 2 திரைப்படம் வரும் டிசம்பர் 5 ஆம் தேதி வெளியாகவுள்ளது. இந்நிலையில் படத்தின் டிரைலர் விரைவில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நவம்பர் 17 ஆம் தேதி அதற்கு தேதி குறிக்கப்பட்டது.

அதன்படி மாலை 6.03 மணிக்கு புஷ்பா 2 டிரைலர் வெளியாகவுள்ளதை உறுதிப்படுத்தி உள்ளது. டிரைலர் வெளியீட்டு விழா பாட்னாவில் மிக பிரம்மாண்டமாக நடைப்பெறவுள்ளதாக படக்குழு அறிவித்தது. படத்தில் ஸ்ரீலீலா கிஸிக் என்ற பாடலுக்கு நடனமாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மிஷன் இம்பாசிபிள் 8.. முதன்முறையாக சண்டை காட்சிக்கு டூப் போட்ட டாம் குரூஸ்



ஹாலிவுட் ரசிகர்களை பெரிதும் கவர்ந்த ஆக்சன் படங்களின் பட்டியலில் 'மிஷன்: இம்பாசிபிள்' படங்களுக்கு கண்டிப்பாக இடம் இருக்கும். அதுவும் டாம் குரூஸ் நடிப்பு மற்றும் ஸ்டண்ட் காட்சிகளை பற்றி சொல்லவே வேண்டாம். ஆக்சன் ரசிகர்களை ஆச்சரியப்பட வைக்கும் இந்தப் படத்தின் முந்தைய பாகங்கள் ஹாலிவுட்டில் வெளியாகி வசூல் சாதனை படைத்துள்ளன.

சீக்ரட் ஏஜண்டாக டாம் குரூஸ் நடித்து 1996 ஆம் ஆண்டு முதன் முதலில் மிஷன் இம்பாஸிபிள் படம் வெளியானது. முதல்பாகம் பெரிய அளவில் வெற்றி பெற்றதை தொடர்ந்து அடுத்தடுத்து 7பாகங்கள் வெளியானது. இவை அனைத்துமே நல்ல வரவேற்பை பெற்றன.

கடந்த ஆண்டு ஜூலை இந்த சீரிஸின் 7 பாகம் வெளியானது. அதில் 'ஏஐ தொழில்நுட்பம்' மையமாக வைத்து முந்தைய பாகம் உருவாக்கப்பட்டது. முந்தைய பாகத்தை இயக்கிய கிறிஸ்டோபர் மெக்யூரி இந்தப் பாகத்தையும் இயக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த பாகத்தில் அவர் எந்த வித டூப் இல்லாமல் மலையில் இருந்து கீழே குதித்த காட்சி இணையத்தில் மிகப்பெரிய வைரலானது.

இந்நிலையில், மிஷன் இம்பாஸிபிள் 8ம் பாகத்திற்கான டிரெய்லரை படக்குழுவும், படத்தின் நாயகன் டாம் குரூஸும் வெளியிட்டுள்ளனர். மேலும் அடுத்த ஆண்டு மே 23ம் தேதி இப்படம் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக்ஷன் மிகுந்த காட்சிகளால் டிரெய்லர் நிரம்பியுள்ளது. முந்தைய பாகத்தில் ஒரு கீயை தேடி அவர் பயணம் செய்வார். இந்த பாகமும் அதை தேடியே கதைக்களம் அமைந்துள்ளது.

இந்நிலையில், மிஷன்: இம்பாசிபிள் 8ம் பாகத்திற்கான ஆக்சன் காட்சிகளில் டாம் குரூஸுக்கு டூப் போட்டு படமாக்கப்பட்டுள்ளது.

62 வயதான டாம் குரூஸ் தனது சினிமா வாழ்க்கையில் முதன் முறையாக சண்டை காட்சிக்கு டூப் போட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்துக்கு எதிரான 4வது டி20 போட்டி: வெஸ்ட் இண்டீஸ் அபார வெற்றி



இங்கிலாந்து அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த ஒருநாள் தொடர் 11 என சமனில் முடிந்தது. அடுத்துநடந்தடி20தொடரில்இங்கிலாந்து30எனகைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 4வது டி20 போட்டி இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 218 ரன்களை எடுத்தது. ஜேக்கப் பெதெல் 62 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.பிலிப்சால்ட்அரைசதம்கடந்து55ரன்னில்அவுட்டானார். வில் ஜாக்ஸ் 25 ரன்னிலும், ஜோஸ் பட்லர் 38 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து, 219 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களான எவின் லெவிஸ், ஷாய் ஹோப் அதிரடியாக ஆடினர்.

முதல் விக்கெட்டுக்கு 136 ரன்கள் எடுத்த நிலையில் லெவிஸ் 68 ரன்னில் அவுட்டானார். அடுத்த பந்தில் ஷாய் ஹோப் 54 ரன்னில் ஆட்டமிழந்தார். கேப்டன் பாவெல் 38 ரன்னில் அவுட்டானார்.

இறுதியில், வெஸ்ட் இண்டீஸ் அணி 5 விக்கெட் இழப்புக்கு 221 ரன்களை எடுத்து வெற்றி பெற்றது. இதன்மூலம் டி20 தொடரில் 31 என பின்தங்கியுள்ளது.

# 4வது டி20 போட்டி: வெஸ்ட் இண்டீஸ் வெற்றிபெற 219 ரன்களை இலக்காக நிர்ணயித்தது இங்கிலாந்து




இங்கிலாந்து அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. முதலில் நடந்த ஒருநாள் தொடர் 11 என சமனில் முடிந்தது.

அடுத்து நடந்த டி20 தொடரில் இங்கிலாந்து 30 என கைப்பற்றி உள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 4வது டி20 போட்டி இன்று நடைபெறுகிறது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பிலிப் சால்ட் அதிரடியாக ஆடி அரை சதம் கடந்து 55 ரன்னில் வெளியேறினார்.

முதல் விக்கெட்டுக்கு 54 ரன்கள் சேர்த்த நிலையில் வில் ஜாக்ஸ் 25 ரன்னில் அவுட்டானார். ஜோஸ் பட்லர் 38 ரன்னில் ஆட்டமிழந்தார்.

ஜேக்கப் பெதெல் பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்தார்.

இறுதியில், இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 218 ரன்களை எடுத்துள்ளது. ஜேக்கப் பெதெல் 62 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

இதையடுத்து, 219 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் களமிறங்குகிறது.

# ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்: நம்பர் 1 வீரர் இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



ஏ.டி.பி. இறுதிச்சுற்று எனப்படும் ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி இத்தாலியின் துரின் நகரில் கடந்த 10ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது.

இந்தப் போட்டியில் ஒற்றையரில் தரவரிசையில் முதல் 8 இடத்தில் உள்ள வீரர்களும், இரட்டையர் பிரிவில் டாப்8 ஜோடியினரும் பங்கேற்றனர்.

இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் நம்பர் 1 வீரரான இத்தாலியின் ஜானிக் சின்னர், 6வது நிலை வீரரான நார்வேயின் காஸ்பர் ரூட் உடன் மோதினார்.

இதில் சின்னர் 61, 62 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இன்று இரவு நடைபெறும் இறுதிப்போட்டியில் சின்னர், அமெரிக்காவின் டெய்லர் பிரிட்சுடன் மோதுகிறார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.